முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2024) சென்னையில், நடிகர் சரத்குமார் மகள் வரலட்சுமி – நிகோலாய் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நடிகை திருமதி ராதிகா சரத்குமார் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (03.07.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசு பணியில் 3% பணி வழங்குவது மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதியதாக அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், காவல் துறை அதிகாரிகள், அரசு துறை செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவிடம் நந்தன் கால்வாய் திட்டத்தினை முழுமையாக சீர் செய்தல், தென்பெண்ணை பாலாறு நதிநீர் இணைப்பு திட்டம் 1 பணியினை துவக்கவும், நந்தன் கால்வாய் முறைப்படுத்தப்பட்ட பாசன வாய்க்காலாக அறிவிக்க கோரிக்கை மனு அளித்தனர். இந்நிகழ்வின் போது சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உடன் இருந்தார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (03.07.2024) ஆணையர் அலுவலகத்தில் 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், சுகிசிவம், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், திருமதி தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திரமோகன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

பா.ஜ.க. கூட்டணிக்கு எந்தக் கொள்கையும் கிடையாது!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் பேச்சு....

விழுப்புரம், ஜூலை 5 - விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்ட மன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டி யிடுகிறார். இவருக்கு ஆதர வாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ள னர்.

இந்நிலையில் விக்கிர வாண்டி தெற்கு ஒன்றியம் நேமூர் கூட்டு சாலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநில செயலாளர் முத்தரசன்,சிறு குறு மற் றும் தொழில் துறை அமைச் சர் தா.மோ. அன்பரசன், வணிகவரி மற்றும் பத்திர பதி துறை அமைச்சர் மூர்த்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ் தான் ஆகியோர் வாக்கா ளர்களை சந்தித்துஉதயசூரி யன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட் டனர்.

வாக்கு சேகரிப்பில் ஈடு பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலா ளர் முத்தரசன் பேசுகை யில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலன் சார்ந்த பல் வேறு திட்டங்களை அறி வித்து செயல்படுத்தி வருகிறார்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம்,

கல்லூரி படிக்கும் பெண் களுக்கு புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதம் ஆயி ரம் ரூபாய், தமிழ் புதல் வன் திட்டத்தில் உயர் கல்வி படிக்கும் மாணவர் களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் பெண்க ளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட பல் வேறு சிறப்பு வாய்ந்த பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை முதல மைச் சர் செயல்படுத்தி வருகி றார்.

பிரதான கட்சி என்றும் செல்வாக்கு மிக்க கட்சி என்றும் அதிகமான கோடிக்கணக்கான உறுப் பினர்கள் கொண்ட கட்சி என்றும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள கட்சி என்று சொல்லும் அ.தி.மு.க.வினர் விக்கிர வாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் ஏன் போட்டி இடவில்லை என கேள்வி எழுப்பிய முத்தர சன் பா.ஜ.க. அதிமுக கள் எக் கூட்டணி என்றும் அதை நிரூபிக்கும் வகை யில் இப்போது விக்கிர வாண்டி இடைத்தேர்த லில் இருந்து அ.தி.மு.க. விலகி உள்ளதாக குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் முத்த ரசன், அ.தி.மு.க. கட்சியை பிளவு படுத்தியவர் மோடி என்றும் தர்மயுத்தம் செய்ய சொன்னவர் மோடி ஓ பன் னீர் செல்வத்தை அ.தி.மு.க. வுடன் இணைத்து அவ ருக்கு ஒருங்கிணைப்பாளர் துணை முதல்வர் போன்ற பொறுப்புகளை வழங்க சொன்னவர் பிரதமர் மோடி ஆக அ.தி.மு.க. கட் சியை பிளவு படுத்தி சின்னா பின்னமாக ஆக் கிக்கொண்டு இருப்பவர் பிரதமர் மோடி, பா.ஜ.க. கட்சி என்றும் விமர்சித் தார்.

தற்போது விக்கிர வாண்டி இடைத்தேர்த லில் பிஜேபியின் ஆட்சி யோடு ஒரு கட்சி நிற்கிறது.

பா.ஜ.க., பா.ம.க. கூட் டணி எலியும் தவளையு மான கூட்டணி என்றும் எந்தக் கொள்கையும் அக் கட்சிக்கு கிடையாது என் றும் சந்தர்ப்பவாத கூட் டணி என்றும் தேர்தல் வரும் சமயத்தில் தான் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூட்டணி குறித்து பேசுவார் என கம் யூனிஸ்ட் கட்சியின் மாநில பொது செயலாளர் முத்தர சன் குற்றம் சாட்டினார்

வாக்கு சேகரிப்பின் போது பல்லாவரம் சட்ட மன்ற உறுப்பினர் கருணா நிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி உள்ளிட்ட இந் தியா கூட்டணி கட்சி நிர் வாகிகள் கலந்து கொண்ட னர்.

திருத்தம்

"பிரதமரைப் பதற வைத்த பப்பு!"எனும் தலைப்பில் 5.7.2024 தேதிய முரசொலி 3ஆம் பக்கத்தில் வெளிவந்த 'சிலந்தி' கட்டுரையில் 2வது காலம், 2வது பாரா, 2வது வரியில் "அம்புரா தூணியிலிருந்து" என வந் துள்ளதை **"அம்பறாத் தூணியிலிருந்து"** என திருத்திப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். ஆ-ர்.

ஜிகா வைரஸ்!

மாநிலங்களுக்கு எச்சரிக்கை!

டெல்லி. ஜூலை 5 - மகாராஷ்டிரத்தில் ஜிகா வைரஸ் தொற்றுப் பாதிப்புகள் அதி கரித்து வரும் சூழலில். ஒன்றிய சுகாதாரத்துறை அனைத்து மாநி லங்களுக்கும் ஆலோசனையை வழங்கியுள்ளது.

ஒன்றிய சுகாதாரத்துறை வழங்கியுள்ள ஆலோசனையில். தீவிர கண்காணிப்பின் அவசி யத்தை வலியுறுத்தி. ஜிகா வைரஸ் தொற்றுக்குள்ளான கரு வுற்ற பெண்களின் கருப்பையில் உள்ள குழந்தையின் வளர்ச் சியை நெருக்கமாக கண்கா ணிக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது.

மகாராஷ்டிரத்தில் 7 பேருக்கு ஜிகா வைரஸ் தொற்றுப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்களைப் பரப்பும் ஏடிஸ் கொசு மூலம் ஜிகா வைரஸ் பரவி வருகிறது.

ஜிகா வைரஸ் தொற்று பாதிப்பு உயிருக்கு ஆபத்தானது அல்ல என்றாலும். இந்த வைரஸ் பாதிக் கப்பட்ட பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளில் தலை சிறியதாக இருக்கும் நிலைமை ஜிகா வைர ஸுடன் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில். ஜிகா வைரஸ் அறிகுறி உள்ளவர்க ளுக்கு தேவையான சிகிச்சையை வழங்கவும். போதிய மருந்து களை கையிருப்பு வைத்துக் கொள்ளவும் மாநிலங்களுக்கு ஒன்றிய சுகாதாரத்துறை உத்தர விட்டுள்ளது.

நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.அதன்படி மாவட்ட இளைஞர் அணி சார்பில் துணை அமைப்பாளர் மாயா ஏற்பாட்டில் பாளை சித்த மருத்துவமனை அருகில் கழக கொடியேற்று நிகழ்வு பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.நிகழ்வில் அலிஃப் மீரான், செல்வம், இனியன், மைக்கேல், ராஜேஷ், பீரப்பா, ஸ்டார் முருகன்,கேபிள் குமரேசன், பத்மா, சௌந்தரம், மேரி உலகராஜ், பிந்து செய்யது, ஆனி, நர்மதா திலக், சித்ரா, ஷெட்டி, சுப்ரித் சுப்பிரமணியன், அந்தோணி ராஜ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

'நிறைந்த மனம்' என்ற தலைப்பில் அரசின் நலத்திட்டங்கள் குறித்து

பொதுமக்களிடம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கேட்டறிவர்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

சென்னை, ஜூலை 5 - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் மாதந்தோறும் கேட்டு அறிய உள்ளனர் என்று பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வினா-விடை நிகழ்வின்போது தெரிவித்தார்.

வினா - விடை நிகழ் வின் போது கேட்கப் பட்ட கேள்வியும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பதில் வரு மாறு :

கேள்வி : செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரியும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சி ஏதும் நடத்தப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

பதில் : தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட் டங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவ லர்கள் பத்திரிக்கையாளர் களுடன் பொது மக்களை மாதந்தோறும் நேரில் சென்று சந்தித்து, அரசின் நலத்திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்களிடம், அதன் பயன்கள் பற்றிய விவரங்கள் அறிந்து வருகி றார்கள்.

இந்நிகழ்விற்கு வரும் ஆகஸ்ட் மாதம் முதல் "நிறைந்த மனம்" என்ற தலைப்பில் நிகழ்ச்சியை நடத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட் டுள்ளார்.

பேருந்து பயண அட்டை

நடப்பாண்டில், அங்கீ கார அட்டை (Accreditation Card) பெற்றுள்ள பத்திரி கையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தலைமை யிட பத்திரிகையாளர்கள் பயணம் செய்திட 457 எண்ணிக்கையிலும், பிற மாவட்டங்களில் சம்பந் தப்பட்ட மாவட்ட ஆட்சி யரின் பரிந்துரையின் பேரில் 2,917 எண்ணிக்கை யிலும் ஆக மொத்தம் 3,374 கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை கள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர் அட்டை (Press Pass) பெற்றுள்ள பருவ இதழ்கள் / கால முறை இதழ்களில் பணிபு ரியும் பத்திரிகையாளர்க ளுக்கு பேருந்து பயண அட்டை வழங்குவது தொடர்பாக முதலமைச்சர் அவர்களின் மேலான கவ னத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரி வித்துள்ளார்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில்

புதிய நீதிமன்றக் கட்டடம் அமைத்துக் கொடுப்பீர்!

சட்டப் பேரவையில் எம்.சி. சண்முகையா வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 5 - சட்டப் பேரவையில் ஒட்டப்பிடாரம் தொகுதி உறுப்பினர் எம்.சி. சண்மு கையா எழுப்பிய கேள்வி யும் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:-

எம்.சி. சண்முகையா: முத லமைச்சர் அவர்களை வணங்கி, சுதந்திரப் போராட்ட வீரத் தியாகி இமானுவேல் சேகரனுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட் டத்தில் மணிமண்டபம் கட்டும் பணிகள் நடை பெற்று வருகின்றன என் பதை மகிழ்ச்சியோடு தெரி வித்துக்கொண்டு, அவர் பிறந்த ஊரில் அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அரசு விழாவாக கொண்டாடப் படும் என்று அறிவித்த சமூக நீதி காவலர் முதல மைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது சார்பாக உலகம் முழுவதும் வாழ்கின்ற தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்களின் சார்பா கவும், நன்றியைத் தெரிவித் துக்கொண்டு, ஒட்டப்பி டாரம் சட்டமன்றத் தொகுதியில், ஒட்டப்பி டாரத்தில் மாவட்ட உரி மையியல் மற்றும் குற்றவி யல் நீதித் துறை நடுவர் மன்றம் வாடகை கட்ட டத்தில் இயங்கி வருகிறது.

போதுமான அரசு நிலம் உள்ளதால், புதிய நீதிமன் றக் கட்டடம் அமைத்துக் கொடுக்குமாறு அமைச்சர் அவர்களை அறிய விரும்பு கிறேன்.

அமைச்சர் எஸ். ரகுபதி: பல் வேறு நீதிமன்றங்கள் வாட கைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அங்கே இப்போது இடங் கள் கொடுத்தாலும்கூட, அங்கே புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால், combined court building என்று சொல்லி, 13 கோடி ரூபாய் மதிப்பீட் டிலே இப்போது புதிதாக கட்டடங்களும், அங்கே இருக்கக்கூடிய நீதித் துறை நடுவர்களு டைய குடியி ருப்புகளும் கட்டப்படு கிறது. எனவே, நிதி நிலைமைக் கேற்றவாறு, ஒன்றிய அர சாங்கத்தினு டைய matching grantயு டைய அடிப் படையிலேதான் ஆண்டு தோறும் கட்டடங்கள் கட் டப்படுகின்றன.

அந்த வகையில் முன்னு ரிமை யிலே இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு முதல்வ ரிசை யில் இடம் கொடுத்து அதைத் தொடர்ந்து எங் கெங்கெல்லாம் தேவைப்ப டுகின்றனவோ அங்கெல் லாம் கொடுக்கப்படும். எனவே, ஒட்டப்பிடாரம் பகுதியில் உறுப்பினர் அவர்கள், இப்போது வாட கைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற அந்த நீதி மன் றத்திற்கு புதிய கட்டடம் கேட்டு ஏற்கெனவே மனு கொடுத்திருக்கிறார்.

அது இன்றைக்கு உயர்நீ திமன்றத்தின் மூலமாக அர சுக்கு பரிந்துரை செய்யப் பட்டு, அதன்பிறகு நிதித் துறையினுடைய ஒப்புதல் பெற்று, அதன்பிறகு நம்மு டைய தமிழ்நாடு முதல மைச்சரு டைய கவனத் திற்கு எடுத்துச் செல்லப் பட்டு, உரிய அறிவிப்பு தேவைப்படின் தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இ/த.க) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 1751B / 2023

புகைபரப்பும் பணிக்கு வாகனத்தின் மீது பொருத்தப்பட்டு இயக்கக்கூடிய பெரிய புகைபரப்பும் இயந்திரங்கள் 30 எண்ணிக்கையிலும் மற்றும் கையினால் எடுத்துச் செல்லும் சிறிய புகை பரப்பும் இயந்திரங்கள் 100 எண்ணிக்கையிலும் கொள்முதல் செய்தல்

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **11.07.2024 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **12.07.2024 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2199 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ/த.க)**